உ

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநெல்வாயிலரத்துறை

என்றுவழங்கும்

# திருவரத்துறைநாதசதகம்.

---

இஃது

ஷை திருவரத்துறைவாசியாகிய

சோதிஷம்

காண்டீர்

அரங்காசாரி யெனவழங்கும்

ரெங்கசாமி அய்யங்காரவர்களால்

இயற்றப்பட்டு

ஷை ஸ்தலம் திருப்பணி

சீர்காழி- ம-ஸ்ரீ அம்மையப்பபிள்ளையவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

ஷை ரெங்கசாமிஅய்யங்காரவர்களால்

சிதம்பரம்

C. S. சதாசிவம்பிள்ளையினுடைய

சண்முகசுந்தரவிலாசஅச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை அணா ௪.

1911௵ மேமீ 7௳.

ஓம்கணேசாயநம:

# திருவரத்துறைநாத சதகம்.

## காப்பு.

திங்கள்சிரமிருத்துந்தேவன்றிருவருளாற்
சங்கவரத்துறையான்றன்சதகம்—அங்கமுறப்
பாடுதற்குவந்துதவும்பார்வதியாரீன்றவொற்றைக்
கோடுடையானென்றுதியைக்கொண்டு.

## சிவபக்தர்கள்.

பூவுலகிலகத்தியன்சண்டீசனச்சுதன்புலியாண்டபாணாசுரன்
பொறுமையில் துர்வாசன் புனிதமார்க் கண்டனும்புகழுற்றநந்தீ
சனுங், காவறரு பிருகுவுங் கண்ணுவன் மரீசியுங் காணுமாணுப
மன்யுவும், காசில்சீர்த்ததீசியுடன் கவுதமமுனிவருங்காணுபதின்
மூவோரையும், ஆவினிவரம்புமதி யணிகின்ற வண்ணலுக்கான
சிவபக்தரென்பா, ரவருமவ்வப்பரொடு சம்பந்தர்சுந்தரர்மாணி
க்கராயகுரவர், பாவரையுந் துதிசெயினனுதினம் பாவமுமனு
கமணீங்குமதனால், அகத்தினிடை யகலாமல் நிறுத்திவையனு
தின மரத்துறைப்பதி நாதனே. (௧)

## விஷ்ணுபாகவதர்கள்.

பேருலகில் நாரதன் பராசரன் பிரகலாதன் பிழையற்ற புண்டரீகன்
பீடுசொல் வியாசமுனி சுகனம்பரீஷனெடு பின்னருருநற் பீஷ்மனே
சீருலவு சனகன்னுருக்கு மாங்கதன் விஜயன்செய்யதா ல்பியரிஷியுமே [ன்
செப்புமாவலி யனுமன் விபீஷணச்சிரஞ்சீவி, செகமேத்து வசிஷ்டனுத்தா
பாருணவுதான்கொண்டமாயவர்க்கமைந்திட்டபக்தரென்றிவரையறைவார்
பாரதனிலிவர்பெயர் பண்போடு துதித்திடில் பரிசுத்தநின மெய்துமே
ஆரணியு மண்ணலை யனுதினந் துதிசெய வறிந்துகொள் ளவனிமீதி
லகத்தினிடை யகலாமல் நிறுத்திவையனுதினம்அரத்துறைப்பதிநாதனே

## ஒவ்வொருவர்க்கோவ்வோர்சமர்த்து.

பூவுலகிலுதித்த வரிலொருவர்பேசிடவல்லர் புதிதொருவர் பாடவல்லார்.
புகழ்கின்ற விசையோடுபடித்திடுவரேயொருவர்புதியநன்னூலையெல்லாம்

நாவுறுதல்வாணியென நற்பயன்சொல்லிடுவர் நல்லமுத்தெழுத்தாகவே
நானிலத்தெழுதிடுவர் நல்விகடகவி பாடுநாட்டினி லொருவனவன்
காவேறுதருவென்னகாரென்னவீந்தொருவன்காசினியிலிசைபெறுகுவான்
காத்தாலும்பலநாளுங்கடைசியிலிலையெனுங்கடுஞ்செட்டனொருவனவான்
ஆவல்கொள்ளவரவர்க்கோரொருசமர்த்தன்றியனைத்துமேவாராதுகாண்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே (௫)

## ஈதலின் பெருமை

யாரேனு முலகுதனிலறமாக வீட்டுபொருளானதை விருத்திசெய்து
ஆடைநன் பூஷணமறுசுவை யுண்டியுமாணபின் னதிகரித்தால்
மாரியதுமறுமையில் லதுவந் ததவிடுமொர்க்க முண்டதனையோசி
மாணிடர்தனக்குவெகுவட்டிக்கீயவதிலுமாப்பொன்னுமனந்தமாகும்
வராததற்குவமை வந்திறந்தோர்க்கீயில் வழங்குவாரொன்றனந்தம்
வருதமரினுள்ளோர்கள் வறுமைக்கிடங்கொடார் வந்தீவர்யாசகருமே
ஆரோடுபணிமதி யணிந்திடு மண்ணலை யறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(௬)

## உத்தமமான வகை மூன்று.

உலகுதனிலுதித்தவர் களெவராயினுந் தருமவழியினாலுற்றபொருளை
ஓங்குமுக்குற்றமுந் தீங்கென்றொழித்திட்ட வுயர்மறை தவத்தோரிடம்
விலகிடவேதன்குறை விரித்தேத்தியீவது விளங்குமுதற்றானமென்பார்
வேண்டிவருமதிதி பரதேசிவிழியுணர்விலார்விரலிலார்முடவர்க்குமே
செலவுசெய்தளித்திடுதல் மத்திமமாகுமாஞ் செப்பினேமதமதானஞ்
சேரரிவைகைமாறுகண்ணேட்ட டம்பமாஞ்சேரச் சகாரணத்தால்
அலையுமதியுடையோனு மளிக்கிலது வீணதாமன்பர்க்கு மன்புசெய்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(௭)

## தானபாத்திர பலன் விதி.

தீதிலாப்பொருளதனை யாவர்க்குமீவதுதெரிவைவிண்மாரிபோலாந்
தேருமியதில்பேதமழைத்துளியினால்வருந்தேயாதசிப்பிமுத்து
கோதிலாக்கற்பூரங் கதலியிடைவந்திடுங் கொடிவிடநாகமமையுங்
குறித்தகடலதிலுப்பு பாலாழியிற்பாலுகொள்ளுசெம்மண்ணில்சேப்பாம்
ஈதெலாமழைத்துளியின் காரணம்வருகினு மெழில்வஸ்து பேதமாகும்
ஈகின்றதானபலன் பாத்திரப்படியமையுமெவருக்களிக்கினுந்தான்
ஆதலாலறிந்தீயுமவனடைவன்முனபலனெவர்க்குமாதாரமாம்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(௮)

## ஓர்குணத்தினா லுத்தமகுணங்கள் போய்விடும்.

உலகதனிலுதித்திடுமானிடர்க்கிரண்டுகையதிலிட துகைப்பெருமையோம
ஓங்கிவருமெதிரியின்குடுமிகைப்பற்றிடுமோதுபரிதனைநடத்தும்
பெலமாசர்பேட்டிக்குமுன்பேசியாசிசொலும்பேசிடுஞ்சூதுமுதலாய
பேருள்ளகளவுவகையதனில்பின்னின்றிடும்பேதைமைப்புத்தியதனால்
கலைதெறியுங்கவிவாணர்மற்றவர்தமக்குமேகருதிக்கொடுப்பதிலையாற்
காசினியிற்சவுசாதிகாரமுனக்கென்றுதான்கழறினார்பெரியோர்களே
அலியெனினுமாருக்குமீவதேபெரும்பயனறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமாத்துறைப்பதிநாதனே. (எ)

## யாசகனிலக்கணம். [கவே

தாரணியின்மானிடர்கள்தனக்கில்லையெனநொந்து தாமொருவரைக்கேட்
டானினைந்திடும்போதுதாழ்ந்திடுஞ்சாணொன்றுதருமவனைக்காணவேகில்
சீரிலாததிற்பின்னுஞ்செப்புசாண்குறைவதாஞ்சேருமவனூர்சென்றிடில் [ம
சிறப்பன்றிசாணதில்குறைவதாஞ்செல்வனகஞ்சேரிலதில்சாண் குறைவதா
ஏர்பிரபுசமயத்தைக்கண்டவில்சாண்குறைவதாமெழில்முகந்தானோக்கினால்
இருந்ததில்சாண்குறைவுயில்லையீயென்பதிலெண்சாணுமொருசாணதாம்
ஆர்பெரும்பரமனையன்போடுதுதிசெயவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(அ)

## இதுவுமது

பார்க்கின்றபூளையினற்பமாம்பஞ்சுவதிற்பகருயாசகனற்பமாம் [டான்
பறக்காதிருப்பதேன்காலின்முன்னவனெனிற்பகர்வாதானறிந்தேன் [விட்
ஏர்க்கின்றவர்க்குமுன்னெதிர்ப்படாற்கேழ்பயனொனவெண்ணியேயொதுங்கி
னதேனுமில்லையெனவேற்பவர்க்கிசைத்திடிலிசைபெருமைதானகலுமே
கார்க்கின்றகாசினியில்கனலோபருக்குமேகருதினோக்கியாவிடில் [ம்
காட்டினிடைசன்னியாசிதண்டுகைபோலவேநழுவிநின்றிடுஞ் செல்வமெல்லா
ஆர்க்கின்றவப்புவனியப்பனைப்போற்றிடவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. (கூ)

## சோடசமஹாதானம் 16 அறிய.

நாகமதுகுதிரைபெண்கலமானசுவர்ணமும்நற்கம்பளம்வீடுதான்
நாடரியவுழையாடுநற்கபிலைகன்றுடன்நயசகடம்நன்பகடுதான்
தாகமொடுபூமியுந்தயவாருநாங்குலந்தாழாததகால்சீங்கரம்
தக்கவுயர்துலாப்பாரந்தலைபணைமெத்தையுந்தருதானம்பதினாறுதான்
பாசமுடனிதனையேயுவகையாவீவோர்கள்பரராஜர்கொண்டாடவே
பகரில்வெகுகீர்த்தியுடன்பாராளுமன்னராய்ப்பரமனுக்கன்பரவார்

ஆகமதுதிசெயுமடியவர்க்கடியனேயருள்சிவிகைகொடையாளனே
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(க0

## குடும்பிக்கு ஆசிரமபலன்

பெத்ததன்மனையன்றிபிறர்மனைவியாரவர்கள்பேரொழில்பெற்றவரினும்
பிரியமொடுசரசவகைசெய்யினும்பேசிடான்பேர்பிரமசாரியாவன்
நித்தியமுமொருவர்தம்பொருள்வரவுநினைவிலான்நேர்தானம்பதினுறையும்
நிதஞ்செய்யுங்கிரகவாச்சிரமத்தனவனெனவறைந்தனன்றருமவியாதன்
சத்தியந்தப்பாமற்றரணியில்வருபவன்சார்ந்தவானப்பிரஸ்தன்
சாருசுகதுக்கமுஞ்சமனென்றிருப்பவன்சார்புவியில்சுத்தஞானி
அத்திருசூழரவமணிஅண்ணலைத்துதித்திடுமவனின்னபலனையடைவான்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(கக)

## புருஷார்த்தபலம்.

புவிபிறந்தார்க்குதவிதபங்கொடையொழுக்கமாம்புகழ்கல்வி நான்கதாகும்
புரியுமதுநீராடல்தானமுதல்நால்விரதமபொருந்துநய போஜனந்தான்
புவியுளானுபினுமமையுமுச்சாகமொடுபெலிப்பதேபுண்ணியம் சாற்றம்
பகர்கின்றஅன்னபானதிபரமந்திரம்பாருலகிலடிமைகாத்தல்
குவியுறும்பிணிதீர்த்தல்சிறைகாத்தல்புறங்கூறல்கூரறவைபிணமடக்கல்
கூரினேமிதுவெலாந்தேகோபகாரமெனக்குறித்துமறைப்பொருளியம்பும்
அவித்தைவிட்டுனையடையுமன்பருக்கருள்புரியுமத்தனேயவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(கஉ

## புருஷ நற்குணம்.

நீண்டிடுமுயர்திணையிலுத்தமக்குணமதாம்நினையாதவர்க்காயினும்
நிகராதமெய்யுரைப்பயன்படுசொனல்வார்த்தைநித்தமுஞ்செய்புண்ணியம்
வேண்டுவதுவாக்கினதுவிதியானவுடலியல்புவிதித்தநன்னீராடலும் [யாம்
வேள்வியொடுதவஞ்செயல்வலம்வருதலாலயம்வெற்றிபெறு மனச்செய்கை
மாபுவியிலுபகாரமாகவேவர்திமெகத்துக் கள்குணமிதென்பார்
ஆண்டுபெதினுயிரந்தேடினுங்காணுதவையனையறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. கங

## மாந்தர்க்கு 10 புத்திராள்.

பாருலவுமாந்தர்க்குப்பாலனேபத்தென்பர்பகருவேனதையறியவே
பண்பானவவுரசன்க்ஷேத்திரஜன்கானீயன்பகருகூடோத்பன்னனும்
நீருலவுதேலரன்னபிமானன்தத்தனுஞ்சேருகிரீடோத்பன்னனுஞ்
செப்பினேர்துஹித்திரன்செய்மகப்புத்திரன்சேருமீரைந்துசுதனும்

கூருலவுபுவியின்மேல்கருமஞ்செப்புரியார்கள்காணு முன்னகத்திலேதான்
கலியுகமதில்தத்தன்அவுரசன்நூஹித்திரன்காணுகூடோத்பன்னனும்
ஆருலவுசென்னியுளவய்யனைத்துதித்திட அறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(கச

## இதுவுமது

கச்சையணிமாதைமணஞ்செய்ததிற்கருவரிற்காணுமவுரசபுத்திரன்
கருதுநற்பாரியைபிறர்கலந்துதித்திடில்கழறுக்ஷேத்திரஜபுத்திரனும்[ம்
இச்சையாலொருபெண்ணைக்கூடியுண்டானவனிணங்குகிரீடோத்பன்னனு
எழில்மனைவிதன்மனந்தெரியாமலுற்பத்தியேறுகூடோத்பன்னனும்
பக்ஷமுடனேகன்னிகழியாதவளோடுகலந்தசுதன்கானீயனும்
பார்புவியில்மனைவியிடந்தேவர்முனிக்காஞ்சுதன்பகருதேவரபுத்திரன்
அச்சமில்சிவனடியைஅன்புவைத்தனுதினமர்ச்சிப்பையவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(கரு

## இதுவுமது

தண்ணுதமரோரிடம்தாக்ஷிண்யமதுவேணுந்தங்குபரிஜனமீதினில்
தயைவைத்தல்கவிஞர்பால்தானீதலப்புறந்தக்கர்பாற்றுனேசமாம்
நண்ணுபுவியரசர்பால்நயமுரைத்திடவேணும்நாரிபாலெப்போதுமே
நன்மையுரையாகாதுநானிலத்துட்டர்பானுடதெண்டனைநீதியாம்
உண்ணினுஞ்சத்துருபாற்சவுரியமுரைத்திடுகவோதுமுபதேசியுயர்வோ
டுத்தவர்களின்மீதுபெருமையேவைத்திடுதலுலகத்தில்முறையாகுமாம் [ல்
அண்ணலைப்பொருளென்றுயாருமேயுரைத்திடுவர்அறிந்துகொள்ளவனிமீதி
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே (கசு

## புருஷர்களுக்கழகானது.

அரசருக்கம்புவியில்ஞாயமேயழகதாமரிவையர்க்கழகுநாணம்
அனைத்தையுமறிந்தவர்களாகுமும்மலத்தையழித்திட்டிருப்பதழகாம்
சர்சமதுமிகவழகுசாதுரியகணிகைக்குசாத்திரேஞ்சுகவீலையாம்
சாருமறையோர்க்கழகுசகஜமாமறையோதல்சரசுமிகவூர்க்கழகுகாண்
பெரியநிதிபடைத்தவர்கள்பேருதவிசெயினழகுபெரிதானவாசிக்குமே
பெரிதானநடையழகுதெரியாமல்பிழைசெயில்பெரியோர்கள்தீர்ப்பதழகாம்
யரைச்சணத்திடைவிடதரவமணியையனுக்கன்புசெய்யவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(கஎ

## மாதர்களின் ரகசியம் நில்லாமை.

மணிகொண்டமாலையணிபாண்டுபூபதிமனைமாதரசிகுந்தியென்பாள் [ளுள்
மீகவடையும்விஞ்சைபொருளாறையுங்கற்றுலகின்மைந்தனைக்கொண்டாடி

கணியண்டிப்பிசைபெற்றகர்ணமகாராஜனைக்களத்திடைச்சரித்தவகையால்
காரிகைகருத்துவெளிப்பட்டிடாதிருந்ததாற்சனபழிக்காளாகிறேம்
திணிமுரசுகொடிதருயன்றீராதகோபனுய்தேர்வி ஜயன்முகநோக்கியே
தெரிவையர்களின்றுமுதலேதேனுமிரகசியந்தெரிந்திடல்பிறரியவே
அணியணியறைந்திடச்சபித்தனனுதிட்டிரன் அன்றுமுதலுளமடக்கார்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. (௧௮

## அஞ்சலிவிபரம்.

கவ்வுநீர்காசினியிலகாணுமறையோரன்றிகழறுமுச்சாதியாஞேர் [ட்டால்
கல்வியாற்கேழ்மையாற்பெருநிலப்பெருக்கிஞற்கண்டொருவன் தெண்டனி
செவ்வையாயவருக்குபதில்தெண்டமிட்டிடுதல்சிறப்பதாமிதுவன்றியே
ஜெகமெச்சஆசிகொவி ்சேர்ஜென்மசீசஞைப்ஜென்மித்துஜெனங்களுககு
ஒவ்வொருவர்தமக்குமேதடியோடுகும்பிட்டுவோதுகைப்பதிற்றண்டமும்
ஒராமலேயுலகிலெல்லார்க்குமடி மைபாமோயாததொழில டைகுவான்
அவ்விதியினிப்படியஞ்சலிப்பலனெனவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.[௧௯

## போதாயன அமாவாசி

செப்பிடுஞ்சதுர்த்தசிசேருவாரந்தனில்செ பலுநால்யாமத்தினில்
சேர்ந்துவரிலமாவாசிசிறிதுற்றபோதிலுஞ்செப்பிடுவர்போதாயனம்
இப்புவியிலமாவாசைபிரதமைகூடிடிலினியபிரதோடகாலம்
எழிலாயமைந்துபின்றிதியேகுறைந்துவரிலிசைத்திடுவர்போதாயனம்
தப்பிலாசச்துர்தசிதான்விருத்தியமாவாசைதானதில்குறைந்துவரினுந்
தக்கதொருபிரதமைதுதிகைதானீனமாய்தான்பிறையுதிக்கிலறைவார்
அப்புபணிமதிசூடுமெண்ணலேநன்றாகவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே (௨௰)

## யுகப்பிரமாணமாவது.

கடையின்முன்வருகின்றகருதாதியுகமதில்காண்வயதுகோடிலெக்கம்
காணுநீயிரண்டதாம்யுகமதனிலாயுளுங்கருதிஞர்லெக்ஷமெனவே
புடையில்வருதுவாபரம்புகலுவாராயிரம்பொருந்துகலியுகமதனிலே
பிழையன்றிச்சதவருடம்பூணுவாரதிறீர்க்கம்போனபின்மத்தியந்தர
ணடையதாமறுபதிஞறுள்ளவயததாமிதற்குமேலற்பவயசு
எழிலாருமுப்பத்துமூன்றென்றுரைப்பரேயிதுதீர்க்கமத்தியாற்பமாம்
அடைவுடன்னதையதையுமும்மூன்றதாய்ப்பிரித்தறிந்துகொள்ளவனிமீத
யுகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரததுறைப்பதிநாதனே.(௨௧)

## சிரார்த்தத்துக்காகாதபுஷ்பம்.

திதியதனில்மல்லிகைத்தாழையோடலரியுந்திண்டொணுமுல்லைமலருந்
தேசத்திலப்பியங்களுந்தீபமில்லாமல்திகழோமமில்லாமலும்
துதிசெயுந்தக்ஷணையேன்றதில்லாமலுந்தொல்காகபலிபிண்டமும்
தொகுத்ததனைவிட்டிடினுந்நாயதிலங்கள்ளினுங்கொல்பிதாசபித்தேகுவான்
சதிசெயுந்தக்கைதாயென்னினுமவரவர்க்கானபடிசெய்யவேணும்
சகமதனிலவர்களேச்சதநிதம்போற்றினோர்சகலபலனடைவர்கண்டாய்
அதிபருவம்வருமுனைசனிதனையணிந்திலமலனைப்போற்றிவாழ்நீ
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. (உ௪

## இதுவுமது.

என்றெனினுமாகாதுகுருநிமைசெவியினனவயவங்குறைவாயினோன்
இசைகினறஷணரோகமுற்றவரிப்புலியினெழிற்பிரமசாரியானோர்
நன்றிலாவபத்நீகனற்கருமம்விட்டவனவிலுசந்நியாசியோவி
நாடதனிலாசௌசமுற்றவனற்குருநாடிடார்திதிக்குரியராய்
அன்றிபின்றன்சாதியதில்வராதவனையுமானகுலந்தலைமன்றுறும்
மவரின்வழியறியாதவதிசுத்தனென்னினும்யாருமேசேர்க்கொணாது
அன்றிவருவோர்குறையகற்றிவீடளித்தமெய்யனையறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே, உரு

## எப்போதும் சுசியுள்ளவைகள்.

நமசகம்பூமியுமினியதோர்பாலனுமெழிலுதவுவேசிமாரும்
வரானவழலுடன்மானதிபுஷ்பமுமேங்கிடாப்பசுவுமறைபோர் [ஞ்
சீமயனச்சொல்லொணாமேசேர்ந்தவணைகமேயார்க்கெலாஞ்சேர்ந்திடாதுயஸ்சூதக
செப்பினுந்தேனுபால்ரோசனைசவரமுஞ்சேர்முத்துசெந்தாமரை
தீயிகழம்பொன்புனுகுதானியம்பட்டுடன்மேதறுகற்சய்வாதுதான்
தேயமதில்பிறந்தவிடமீனமாயிருக்கினுந்திரள்சுத்தவஸ்துவென்பார்
ஆசிரயமாகிநரசிங்கனைவீழ்த்தவாவய்யனேயெனையாளுவாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. உசு

## புருடர்க்குத் தீக்குணம் 10.

இந்தவுலகத்திலுளமனிதர்க்குத்தீக்குணமிழிவுளதுபத்தவென்பா [ர்
ரேதெனிற்பொய்யுரைகோட்சொலல்கோபித்தலெழில் பயனிலாதசொற்க
வந்திடிலிதனையேவாக்குதீக்குணமென்பர்வகையிலாக்களவாடலோர்
வறிதேதொழிற்செயல்கொலைசெயல்சூதாடல்வளர்காயதீக்குணந்தான்
நிந்தையுளகொலைசெயநினைத்திடதலோர்காமநீட்டித்தேயாசைபெறுதல்
நிலையிலாதொருசித்தநெடுமனக்குற்றமாம்நீணிலத்தவர்காணவே
அத்தமுடனவனிதனிலமர்ந்தேயிருந்திடுமகிலபரிபூரணனையே
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ()

## விட்டுவிடவேண்டியவர்கள்

தக்கதொருசமயத்திலுதவாதசுற்றமுந்தனக்குவேண்டியவரத்தைத்
தருவதற்கிசையாததெய்வமுந்தாவுபரிதானேறிநடவாததும்
மிக்கசுகலீலைக்குமேவாதமங்கையுமேலான்கல்வியதனை
மேதினியிலறியாதமானுடர்கள்நேசமும்இகுத்தவனாகிலுந்தான்
றொக்குதவியில்லாமலூழியஞ்செய்திடுதலுயர்ந்தநற்சமயத்திலு
முதவாதவிவர்களையொழித்திடுதனலமென்னவோதுமேநன்மறைகளே
அக்கரமைந்துளவையனைக்கண்டுநன்கறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே ( )

## நித்தியதேரிசனக்கிரமம்.

காசினியில்மானிடர்கள்கங்குலுயிலெழும்பொழுதுகாணுநன்குறியானவை
கபிலையொடுதர்ப்பணங்கதிர்தனமுள்ளவன்காத்திடுமரசர்தன்னை
வீசுமறையோதுகுருவேண்டிடும்பதிவிரதைவிட்டிடாதன்னமிடுவோன்
வேண்டில்ருணமீபவன்விநாயகனுதியாவிளங்குகுலதெய்வமதனைக்
கூசல்விட்டனுதினங்குறித்தோரைக்காண்பதுகுணமாகுமிப்புவியினில்
கூவலயந்தனில்வாழ்க்கைசெய்யுமானிடருக்குவுற்றவிதியெனச்சொல்லினர்
ஆசுமுதல்விஸ்தாரமானகவியோர்புகழுமண்ணலையறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. உஎ

## அந்தணர் ஆசியால் வருங்குற்றம்

முந்தமறையோர்களின்முகமிவன்நோக்கிடில்முன்றண்டஞ்செய்யவேணும்
மோசமாயிருக்கவவன்மறையாசிசொல்லிடில்முன்சொல்லுசூத்திரன்றன்
னொந்துநரகெய்திடுவனூல்வலான்பின்றவன்றேகமரியாதைவிட்ட
நோம்பிடுந்தவமற்றுநொடியினில்லானையாயுதித்தனளிந்திரத்துய்மன்
வந்தவனைரக்ஷித்தவராகன்முதலோர்தொழவருநாரிபாகனை
வருகங்கைமதியரவமத்தையணியையனைவையகந்தன்னிலேநீ
அந்தமுடனடிதொழுதருர்தனைப்போற்றிடவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ( )

## குணமேலிடிற் குற்றங் குறைதல்.

ஓதுமதிதனக்கதிகுட்டமுண்டானதுமோங்கிமயமலையானதை
யொழுகுபனிமூடியதுமுவரியுப்பானதுமுயர்வறுமைகவியோர்க்குமே
நீதுபெறவுற்றதும்ஸ்திரீதனந்தொங்கலுந்திகழ்குமரிகிழமானதும்
தெரிமணச்சந்தனத்தருவைபாம்புற்றதுந்தேமறைத்தாள்கள்முள்ளும்
யாதுவந்துற்றதையனுதினம்யோசிநீயவரவர்க்குற்றபடியே
யமைந்திடினுமவரவர்கீர்த்திதான்போகுமோயாதுவந்துற்றபோதும்
ஆதியாம்பரமனையனுதினந்துதிசெய அறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. உக

## விரத பங்கமில்லாதவுண்.

காணுமெய்ப்புபால்கனிகிழங்கவைகளுங்கருதுசெய்யவிசானதுங்
காதலுறுமாவுடன்காணமறையோர்திதிக்கட்டளைக்காகவமைதல் [ன்
தோணுமேயிதுவெலாந்தோஷமேயிலையெனத்தொகுத்திடுங்கருமநூல்தா
னிறல்புவியில்கணரோகந்தோன்றிடுங்காலமுங்கொல்லரசர்கடுங்காவலைப்
பூணவேதவறினும்விட்டிடினுமதற்காகப்பொருந்திடாதோடமென்பார்
போதநூற்படிக்கதைப்புறமெடுக்கலாம்பூநன்மையாகுமேதான்
ஆணவம்நீக்கியேபரமனைத்துதிசெயவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௩௰

## மரியாதையில்லாவிடம்நீக்க.

எழிலானமரியாதையிசைசுத்தநேசமுமிகுத்தநன்கவியோர்களும்
எப்போதுமோரநீரின்சுவைநதிகளுமேற்குமவர்க்கீதாதையும்
இழிவானரோகத்தையெடுத்திடும்வைத்தியனியம்புநற்காலமதனை
இன்னதாமென்றுமேயிசைக்கின்றசோதிடனியல்பானதருமநீதி [னும்
யொழிவானவிடமதனிலொருநாழிகிற்கொணு தொழிந்திட்டவேளையெனி
உற்றபெரியோர்பரமனடியாரைப்போற்றிடவுவரிசூழ்புவியின்மீதில்
அழிவிலாச்சிவனடியைஅன்போடுதுதிசெயவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௩௧

## அறியாமை

விரிவுலகில்தன்மங்கைவெகுவசுவமென்னினும்விநம்புவள்வேறொருவரை
விழைசுகன்வெதுவித்தைகற்றாலுமவனைப்பேவென்றுடர்வின்பூமியில்
பெரிதுமுருமுயிசைகொல்லையிலிருக்கினும்பெரிதென்னவதனைநாடார்
பெறுபாலரிழிவானகாரியஞ்செய்யினும்பேசிடார்பெருமையென்பார் [ஞோர்
தெரியவுரைசெய்பெரியர்வார்த்தைதனைத்தீதென்பர்தெளிந்திடாமூடரா
தேசத்திலிருக்கின்றபெரியோரைநிந்தித்துநிரருதானடைகுவார்
அரிபணியுமப்பனையனுதினம்போற்றிடஅறிந்துவாழவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௩௨

## மூடர்கள்தொட்டதைவிடாரென்பது.

எப்போதுமிசைபெற்றவிராவணன்காணவேயிலங்கையிற்றீயிட்டதும்
எறிகடலின்மீதுமலைகற்றெப்பமானதுமிழைத்தறிக்கானைகொம்பு
கொப்பாகநழுவினதுங்குரங்குவந்துற்றதுங்கூறுசஞ்சீவிமுதலாக்
குணமாக்கிடைத்ததுங்கூடவிட்டிறந்தபின்குரங்கவைகளுண்டாதலும்
பப்பாகமுதலுளிற்பகைவனுயிலைத்ததும்பார்த்துமேயிராவணன்றான்
பார்மீதில்லேசன்னடைசெய்தேயிறந்தனன்பார்புவியிலிதையறிகுவாய்
அப்பாருளோர்காணகுடைசிவிகையீந்திடுமெய்யனையறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௩௩

## சந்திரன்பெருமை.

சசிதனக்குரியதாம்பாலுசாகரமதிற்சசியுடன்பிறந்தோர்களோ
சகலருந்துதிக்கின்றயிலக்குமிபிநதிராணிசாற்றிடில்கௌஸ்துவந்தான்
ரசிதவுடலோனென்றுமரன்சிரமிருந்திவெனருவிபோற்றண்மையாமரு
ணம்புவியிலேசராசராதிகட்கெலாமானந்தமயமாயினோன்
விசிதமுட்டாமரைவெண்டிங்களைக்கண்டிவெள்கியேகுவிந்திவெது [ரே
வெண்பிறையின்றேடமெனவிளம்புதற்கென்ஞாயம்விரிமலர்ச்செய்யையான்
அசிதனெனுமென்றனையருளினுற்காத்திமெய்ப்பனையறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. [illegible]

## சேரிடமறிந்துசேர்தல்.

பார்மீதிலுதித்திடம்பலவகைப்பறவையும்பகருவனமதைச்சேருமே [ச்
பணிமெத்ததரளநகையௌவனப்பெண்களும்பார்த்தவர்புருடர்தன்னை
சேர்மேவுநதிகளும்செழுங்கடல்தனிற்புகுஞ்செப்பிடம்பரங்களோ
செவ்வையாய்மலர்களின்தேனினிதைநாடிடுஞ்செழும்புனற்பள்ளமேகும்
கார்மேகமென்னவீமனிதனைச்சேருமேகாசினிபினற்கீர்த்திதான்
நயருணசமர்த்தியசத்தியதிடசித்தனைநாடியேசிறப்பளௌசுவாமி
ஆர்பரவுசிரமுள்ளவப்பனைத்துதிசெய்யஅறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே, [illegible]

## காரியசித்தியாற்பகைவருதல்.

பேருலகில்நாரிக்குப்பிள்ளைகைக்கொத்தபின்பெறுபுருஷன்பகைவனுவான்
பெருவித்தைதந்தபின்றேசிகன்பகைவனும்பேசுநோய்தீர்ந்திட்டபின் [ன்
சீருலகில்வைத்தியன்பகைவனுய்ச்சேர்ந்திடுவென்செய்தாரங்கைக்கொதசபி
சிறுமைபடப்பெற்றேவளர்த்ததாய்பகைவளாஞ்செப்பினுமுலகிலென்பார்
வாருலவுமாபுதான்தளர்ந்தன்பதானபின்வருநாரிபதிவிரதையாம்
வளமானகாரியமொன்றையுமுடிக்கலான்வருபுவியில்சாதுவென்பார்
ஆருலவுமதிபுனையுமண்ணலைத்துதிசெயவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுததிவையனுதினமரத்துறைப்பதிநாதனே.

## சதாசூன்யமுள்ளவை.

கருத்திலாமூடருக்காணதையுரைக்கினுங்கருதிடாருளனுசூனியம்
கருதுஞ்சிமந்திரம்விளக்கொழிந்திருந்திடினுங்காணவதுகிரகசூன்யம்
பெருத்திடுந்தரித்திரமுற்றபேர்தனக்கெலாம்பேசிடும்பொருள்சூனியம்
பேசிடும்பெரும்பாலரில்லாதமனையதேபெருமனைச்சூனியமென்பார்
உரித்தானதெய்வநற்பூசையில்லாதவூணுண்டிடுதேலுயர்சூனியம்
வோர்வாவியாறிலாவூநதான்சூனியமுதவிலான்வாழ்வுசூனியம்
ஆர்த்திடுவோர்தீவினைப்பிணியையேப்பனே அவனிமீதறிந்துகொள்வோ
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. [illegible]

## நித்தியயாகம்.

பிரதிதினமம்மியிற்பலபண்டமரைப்பதாற்பேசுநீரனலிலெவதாற்
பெருகிலெம்பலகறிகளானவையறுப்பதாற்பிசகிலாதவிப்பதாலும்
அரியபுவிமீதினிலழகிலாமலசலமகற்றலால்வழிபோவதால்
அறியாமையுமிழ்தலாலாகின்றபாவங்களடையாமல்கழிந்துவிடவே
தெரிதிதினம்மறையோதலௌபாசனஞ்செயல்தேரசீபலியிடுதலும்
தேவதாபூசையோடதிதியாராதனந்தெரிந்தமட்டவரவர்க்குந்
கருதிசெய்திடலுனைக்கண்ணுதல்காத்திடவேர்கையாலயான்றனைக்கருதியே
அகத்தினிடையகலாமல்நிறுத்திவைபனுதினமரத்துறைப்பதிநாதனே. ௫௮

## மேவலகள்.

உவரிசூழ்புவிமீதிலுள்ளவாதிசைவருமுணர்நுவைநாளிரன்றன்
உறுதிகொள்பஞ்சராத்ரீகவைணவருகையுற்றால்லிவர்மூவரும்
கவுரியோர்பாதிபனைகாளிங்கநிர்த்தனன்கருதியாழ்கோயில்பூசை
காசினியில்செயற்குரியாகாசினுக்குலோபியாய்க்கநதியேவெறுவை
விவரமறியாமலேவைத்திடின்வேதவிதிவிலங்கிடத்தேவுமகனு
வேண்டிவருகாரியாகாரியங்களுக்கவனாவிலக்கிவருவதாமே
அவரினமறிந்துசெய்யாலபட்சனென்றிலைபாத்மமொருக்ஷகனேயே
அகத்தினிடையகலாமல்நிறுத்திவைபனுதினமரத்துறைப்பதிநாதனே. ௫௯

## இதுமகு

வையகத்தனிற்பூசையெழுதிமெய்யிக்கிரகம்வநசாளிக்கிராமமோடு
வாழ்வேதவிக்கைதமுதல்வாரிதிரைசேரமகளும்பாங்கிலெந்தானபண்டம்
மெய்புடனிதைசகிரயம்புரான்செப்திடின்மேயுந்தேவலகனெனவார்
மேதினியிலொருகருமகாரியந்தனக்காகாமெய்புடன்விலக்கவேண்டும்
பொய்யன்றிவிக்கைசையைப்போதியென்றவர்க்குபதேசமாகிருக்குமவனும்
புவிமீதிலேமலேப்பாம்பாய்ப்பிறப்பனென்றுரைக்கும்புனிதநுங்க
ளாய்வெனுமக்கரப்பொருளிருஞன்றன்னையேஅறிந்துகொள்வனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௬௰

## ஒருதுணைத்திறலனேகந்துர்க்குணம்நீங்கல்.

நாடின்றிக்காடுறையுமன்முகம்வசித்திடுநற்சோலைவளமுள்ளதாய்
நல்லகாய்கனியின்றிநாடடப்பயங்கரநனிமிகத்தருதாழைதான்
காடண்டிவாழ்கினுங்கருதுமலர்கந்தமாங்காணுமனிதர்க்குநேசம்
கண்டுகொள்கரும்பழகுகனருசிவாய்க்குதயுங்கருதுசர்க்கரைக்கானதாம்
தாடண்டுவூவதில்தரித்தேமூனைத்திடிறாணியிலொருவர்தீண்டார்
தாளமாயதனையோசித்தணியில்தங்கிடுமிசையுணக்கு
ஆடண்டுதில்லைவனத்தேசத்திருந்தவனைஅறிந்துகொள்வனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௬௧

## அவசியம்எண்ணெயிடுநாட்கள்.

செய்யினும்புவிமீதிலெண்ணைதேய்த்திடுவதற்கெழிலிலாநாளாகினுஞ்
செய்வதற்குரிதாகுஞ்செய்மணமுதற்றினஞ்சேர்ந்துவருதீபாவளி
தையெனுமதிக்குமுன்வருபோகிபண்டிகைதங்குகூதகந்தீரினுந்
தப்பாமனவராத்திரிபண்டிகைதன்னிலுந்தான்வெள்ளிபகலின்மேலும்
மையேறுமாதர்விழிமங்கைபேயுகமாதிபண்டிகைப்பகர்நாளெலாம்
மணமெதாவ்வாத்திதிவாரமணக்கிலேசமாயினும்மாபுவியில்நீக்கொணாது
அப்பனையித்தலத்தைந்துமொன்றுனவனை அறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௪௨

## உடற்குற்றம்.

தொடருவினைபாலுடற்றேன்றிடும்புவிமீதுதுய்த்தருமதின்குற்றமோ
தூயபசிதாகமொடுபயம்வெகுளியுவகையுந்தொடருநன்விருப்பமெல்லாம்
படருநன்னினைவுநோய்மரணமதிசயமோடுபொரிலுறுறக்கமென்பார்
பாழ்பிறவிமதமின்பம்வியர்த்தலைபரவுடன்பாரதநுவமாதுபான
விடருதொகைபதினெட்டுமிச்சைசபடிசெய்பவரிவர்களையிட்டொடாதிக்கி
இபல்மனதைத்தன்வசஞ்செய்துமேல்வாழ்பவரீசனுககடிமையாவார்
அடருவினையததனையுமகற்றியேயாண்டிடுமெய்யனைபவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே ௪௩

## க்ஷவரவிதி.

செப்பிலாமாணிடர்க்காகாதநாளெனினுஞ்செய்க்ஷவரவிதிகளிம்
செவ்வையாயறியதைதீக்ஷைபின்காலமுஞ்செய்யுமியிமவிநிமி
லொப்பிலாப்புண்ணியத்தலத்துற்றநாளினுமோதுகலியாணமதிலும்
மூடம்புற்றரோகமதுதீர்ந்தநாளதனினுமுபர்விலங்கரசர்காவல்
தப்பெலாமொழிபவினாளினுமாசௌசந்தானதுநீங்குநாள்
தரணியில்மாந்தாக்குநாளபாககொணுதென்றுநவிலுதேடாகமந்தான்
அப்புலாங்கூடீதின்மூலர்வநதடிதொழுமண்ணலைபநிறைகொள்ளோ
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௪௪

## பிதிரார்சிதஸ்தலம்விடுங்காரணம்

ஏர்கொண்டவுலகுதனிலெவ்விடத்தாயினுமெழில்சுகங்காணலுற்றால்
எப்போதுமதைவிடாதிருப்பதேவெகுநலமினிபிதிராவார்ந்தவிடமே [மபா
நேர்கொண்டதெனவெணுததில்வாழ்தனித்துவிடினேர்ந்தநிபிதுவெகுநன்மை
நேரிதற்குவமையேகருதிமுன்னோர்களாலமைத்திட்டகூபமெனினும்
பார்கொண்டநீரதிலுயராயிருந்திடிற்பகர்விடாய்தணிக்குமோசொல்
பார்த்துநீசெய்திவைபழஞ்சோறுமீந்தவிடம்பகருவார்கண்ணியென்றே
பார்கொண்டவப்பனையனுதினம்போற்றிடஅறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே, ௪௫

## ஒருவர்போல் மற்றொருவரிருக்கினுஞ் சமனுகார்.

புவியதனிலுள்ளவுழைவகைகளையுதிர்த்திடும்பொருந்திடுஞ்சிங்கதந்தம்
புகழானவாள்முள்ளுபோனகமுற்றிடும்போய்வாழும்பிலமரசனோர்
திவியிராவென்னினுந்தீயசுரஞ்சென்றிடுந்தேருநாய்சிங்கமாமோ
தேசத்திலுள்ளவொருபெரியோர்கள்மகிமைதனைதெளிவிலாதவரறிவரோ
சிவிகையொடுசின்னமுஞ்சீர்காழிசம்பந்தன்சிறப்புடன்பெற்றதறிவாய்
செகமெலாந்துதிசெயுந்திருவாத்துறைதலந்தெரிந்துகொள்ளவனிமீதில்
அவியேறுவாஹனன்னனுதினம்வணங்கிடுமப்பனையறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமாத்துறைப்பதிநாதனே. ()

## திலோதகவிதி

தன்பிதாவிறந்திடிற்றகனஞ்செய்தப்புறந்தான்செய்கநக்கினந்தர்
னத்தினஞ்சிலைநட்டுதன்கரத்தெள்ளுநீர்தானீதல்மூன்றுதரமாம்
பின்புதினமானதற்கொன்றொன்றுஜாஸ்தியாம்பெருநூசுகீரானதோர்
பிரதிதினமூன்றதாம்பேசுமிருத்தியோதக பிசகாமல்மும்மூன்றதாம்
வன்பிண்டமொன்றொன்றுநாளினுக்காகுமேவாழுநவசிரார்த்ததிதியோ
வருநாளிலொன்றைவிட்டுற்றநாளுதவுதல்வாழ்மரபின்வருஞானியோர்
அன்புகொண்டிப்படிஅனுசரித்திடவேணுமவாவர்க்குற்றபோகு
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே சஎ

## இதுவுமது.

இப்புவியினிருபத்திறுலதாமரசருக்கியல்வணிகர்க்கொன்றதிகமாம்
இனியதாமந்தணர்க்கெழுபத்தினைந்ததாமேற்றமாஞ்சூத்திரற்கோ
தப்பில்லைதொண்ணூறுதானெனளுநீரதாந்தானடையுஞ்சூதகந்தான்
றருபத்துபனிரெண்டுதருபக்கநான்கதாந்தரணியில்மாசகாலஞ்
செப்பினேமுதல்மரபுசேர்வரிசையாகவேசெய்யதிரிசாதியார்க்கும்
செய்கைபதினைந்துநாள்சென்றபின்சூத்திரன்சேய்வதற்காகுமுறையே
அப்புதலைமதிசூடும்அரவினைப்பூண்டோனை அறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே சஅ

## மூடர்க்கு அறிவின்மை.

பிறவிவிழிகுருடாகியுதித்தவர்களறிவரோபெரியமாணிக்கமகிமை
பேசுபெண்சுகமதனைப்பேடிதானறிவனோபெரும்புவியில்கன்னியோர்கள்
திறமதாகக்கலவியின்பத்தையறிவளோதேர்ந்துவருமன்னநடையை
தெரியாதகாகமதுகற்றேநடக்குமோதேறுநீமகப்பெறுதலை
பிறவாதவந்தியர்கள்பெற்றவர்போலறிவளோபெறுகுழந்தைரகசியத்தைப்
பேசுதற்கறியுமோபெரிதானதரித்திரம்பெற்றபேர்சுகமறிவரோ
அறிவுள்ளஞானியையசடர்தானறிவரோவவிசாரிகற்பறிவளோ
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. சகூ

## வியாகுலம்பெரிதென்பது.

வாரிசூழ்புவிமீதுமனைவியிரண்டுண்டுவழங்குவார்விஷ்ணுவுக்கு
வாரணியுமிலக்குமிவதிந்திடாளோரிடமசைவிலாதிருப்பள்பூமி [னே
யோருமகனிரண்டென்பரோர்ஞானியாமொருவனுபர்சடலமிலையொருவ
யுயரமளிசேடனுமிறைகடல்வீடதாமுருவான்பருந்தேறியே
பாரிலிதையறிந்தவவன்றன்மனம்புண்ணாகப்பார்க்கமரமாகிவிட்டான்
பார்க்கின்றபேர்களுங்காணலாஞ்செகந்நாதபழமையாந்தலமதனிலே
யாரெனினுந்தீயவினைஅகற்றிடுமையனையறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ருo

## தோஷமில்லார்களில்லையென்பது.

அயிராவதற்காட்டினண்டம்வந்துற்றதுமம்புலிக்கானகுறையும்
ஆதிநாராயணனுயனுய்ப்போனதுமப்புநீருவரானதுந்
தையெனுந்தாசிபால்வதிட்டன்வந்துற்றதுந்தரணியில்மச்சகந்தி
தன்னிடமவியாசன்வந்துற்றதுந்தழலனைத்துண்டதுந்தரணிமீதே
பையரவமணிசம்புபார்வையோடாடினதும்பகருபாண்டவரைவரும்
பார்மீதிலேவருக்குற்பத்தியானதும்பார்த்திடிற்றோஷமிலையா
லையெனும்புவிமீதிலாருளாரன்புடனறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ருக

## மணப்பெண்ணிலக்கணம்.

தாய்தந்தையற்றபெண்துணைவரில்லாதவள்தக்கதுணைபெற்றிழந்தாள்
தருசுத்தம்புகழ்யோக்யஞ்செல்வமில்லாதவள்தருநல்லகுடியில்பிறவாள்
தோய்பிணித்தந்தைதாயுற்றுளார்க்குதித்தவளுயர்பரமனுமமில்லாள்
தொடர்ச்சியாயபமிருத்யுவாதையாலெரழிந்தவனுரியபெயர்தானுற்றவள்
பேய்நாமமிட்டவள்பெருசமயதேசிகன்பெற்றிட்டபெண்ணானவள்
பேசாதஊமையொடுகூன்குருடுகுறையுடல்பெருதேகம்வடிவுடையளே
யாயிழைக்குற்றமென்றம்புவியிலறைகுவாராணமிருகண்டுவுரையே
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ருஉ

## இதுவுமது.

எப்போதும்பிறர்மனையிலிச்சையாய்ச்செல்பவளெழில்கணிகைவிழிபூணுவா
ஏமாறமிரட்டுபவளோரேரமிளஞரையெப்போதுமனத்துன்னுவாள் [ள்
செப்பாமல்வீதிவாய்சேர்ந்தேயிருப்பவள்சிறப்பாகவாடைபணிகள்
செவ்வையாயலங்காரஞ்செய்தெங்குமலைபவள்செல்புசிப்பதிகமுண்பாள்
கற்பாவைபோலுடல்மறந்தேயுறங்கிடுவள்கணவனுக்கதிகவயதும்
கருதிடாரேககோத்திரத்துற்றவள்கடைச்சாதியுயர்சாதியோர்
அ[illegible]ாலுமிலக்கணமியம்புவோமன்புடனறிந்துகொள்ளவனிமீதி
லகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ருங

## இதுவுமது.

குள்ளமாயிருப்பவள்பெரிதானதேகமுள்ளள்கூறிய்மெலிந்ததேகங்
கூனிநிம்படிக்குள்ளகுறில்வடிவுகருமைபாள்கொண்டதோர்சுவர்ணமேனி
உள்ளுநற்றேமலுடம்பெலாமுற்றவளுயர்ச்சிளாபூத்தவொளியாள்
உநிறிடும்நாணத்தைதஒழித்தேயிருப்பவளோயாதபுணாச்சியுடையாள்
விள்ளுமோரதிசயங்காணுமல்பலகாலும்வீணதாய்நகைசெய்பவள்
விளங்குமெல்லியகுரல்விட்டேயிருப்பவள்வீண்வார்த்தையாடித்திரிவாள்
அள்ளல்மரைமலரணியுமகிலாண்டமூர்த்தியையறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ருச

## இதுவுமது.

தந்தைதாய்கட்டளைமீறியேநடப்பவள்தன்கோபமேலிட்டவள்
தக்கமொழியன்றியேவீண்வாதுபேசுவாள்தப்பின்றிச்சண்டையிடுவாள்
விந்தையுளதோர்கூத்துவேடிக்கைவிரும்புவாள்விழைவுளாள்விரகமதிகம்
வேதாகமஞ்சொலும்விபுதரைவீணென்பள்விதிமுறைமுனிவோர்குழா
நிந்தையாயிகழ்பவள்நெடியபிறவுயிர்த்துயர்நேர்படிலிரங்காதவள்
நிலையுற்றகடினமொழிநீண்மரபொழுக்கமுநினைவின்றிப்போருமையாள்
அந்தமுளதெனினுமதுவாகாதெனச்சொல்வரறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ()

## இதுவுமது

கற்புதனமென்பதைகாக்கவறியாதவள்கருதுபஞ்சேந்திரவழியாய்
கருத்துதான்செல்லாமற்றநிந்திட்டுநிறுணிவதாய்காயநிலைபறிந்தபேரை
சொற்பமாய்ச்சீயென்னச்சிலையுரா . தாதெய்வமெனல்சொல்வயதுபத்ததிக
சொல்லுதற்கானவளார்த்தவநற்சோபிபாள்சொல்லினுமச்சமில்லாள் [யாய்
நற்புவியில்மனிதருக்கினிபதுணமல் பாருநயிலசனிபோல்வார்த்தையும்
கல்லதாய்தந்தையர்களைற்பாநிசெப்புமனாதேபெகணவனைடையாள்
அற்புதமெழிலுளாளாகினும்விட்டுவிடவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ருசு

## இதுவுமது

கடிவிருக்குவயைநமக்கீடேதுமில்லையெனல்வனப்பில்வீறுப்புசொல்வாள்
வருநாணமச்சமடம்பயிர்ப்பென்னுமிவைகளைவகையுடன்மனதிற்கொள்ளா
மிடியர்பெண்கெருடபார்வையுற்றிட்டவளியல்பிலாள்விலங்குவிழியாள்[ள்
மேற்பூனைநேத்திரம்பெற்றவள்பார்வைதான்பலகாலுஞ்சுழலுமின்னுள் [ள்
கடிவேணிசெம்பட்டையுற்றவள் சுருட்டைமயிர்கருதுபால்நறைக்குழலிறு
காரானவளகமதுபறட்டையாயுற்றவள்காணுமயிர்கடைகுழன்றுள்
ஆடிவணங்கியீயினுமாகாதெனச்சொல்வரறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ()

## இதுவுமது.

கருதரியவிழிசெருகல்கண்மூக்குநெடியவள்காணவேபெருங்குரலினள்
கழறுசிறுகாதுளாளமையுங்கீள்பல்லுளாள்கணவன்மேல்விழைவற்றவள்
மருவுமறுமுகமினார்சுணங்கிலாமுலையினார்மாணுகற்போல்வயிற்றினார்
மகிழ்சாயவிலக்கணம்விதிப்படிக்கமைவிலாள்மைசுணங்காகவுடையார்,
விரலுரியகுறியோடுகலைபூமிபடிவிலாள்விழைவுமங்கைகநகமுமே
விகிதமுடனேசேப்புவிளங்காதிருப்பவள்விழைகரமென்மையற்றாள்
அரிவரியவதுவையரையாருமேகொள்ளார்களறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ()

## அமுதநிலை.

அம்புவியிலாடவற்கமுதநிலையிருப்பிடமமவாசிபாட்டியமுதலாய்
ஆனதொருவலதுகால்பெருவிரலிருந்துபின்னாந்துதிசைகணுக்காலதாம்
நம்புதிதிதிருதிசைநயமுழங்காலதாம்நாபிதொடைதான்சதுர்த்திபாம்
நலமானவல்குலில்பஞ்சமிக்கமைந்திடும்நாபிதான்சஷ்டிதங்கும்
வம்பிலாச்சத்தமிவழங்குமார்மத்தியில்வளர்ந்திடுங்குசமஷ்டமி
வார்கொண்டபுஜநவமிவளர்தசமிநண்டமாம்வாழ்த்துமேகாதசியினில்
அம்பிகேள்களனமாம்துவாதசிக்கதரமுமாகும்விழிதிரயோதசி
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையநுதினமரத்துறைப்பதிநாதனே. ()

## இதுவுமது

வளர்சதுர்த்தசிநெற்றிவாழ்தலைப்பூரணைவழங்கிடுமமுதமென்பார்
வாழமிர்ததானததினைதிர்விஷத்தானமாம்வருகிருஷ்ணபக்கபிரதமை
இளர்தலையின்நெற்றிவிழியாகுமதரமாங்கேள்கண்ணபுஜமுமாகுங்
மகடுவன்றிகுசமதில்லப்புறமாமத்திகேட்டிடுநாபிகுய்யம்
கனிர்தொடைக்கப்புங்கணமுழந்தாளதாம்கண்டுகொள்தனுக்கால்விரல்
காசினியிலெல்லாருங்காணலாமமுதநிலைகாரிகைபூத்தநாட்கொண்
டளிமலரளிக்கின்றஅங்கனாக்கவ்வாறுமமைநதுவருமென்பாசிலபே
ரகத்தினிடையகலாமல்நிறுத்திவையநுதினமரத்துறைப்பதிநாதனே.(௬௦)

## சிற்பம் 32 கதும்பேயா.

சீரானவிச்சுவதருமமொடுவிச்வேசஞ்சிறந்தநல்விசுவசாரஞ்
சேருநல்விருத்தந்திராவிடநளமயஞ்செப்பனுமனுரல்பானுவா
மேரானசிருஷ்டமொடுகற்பமாரியத்துடனியலானமானசாரம்
இசைகின்றவஸ்துவித்யாபதிபாராசரியெழில்கீடகம்சயிந்தம்
பேரானவஸ்துவேபோதவிஸ்தாரம்புகழிந்திரவச்சிரசவுமம்
புனிதமுளவிசுவமாம்காசிபம்மகதந்திரம்புகழ்ச்சித்திரவிசாலமென்பார்
ஆரானகங்கையணிபய்யனைப்போற்றிடினகத்திலுளபூர்த்திசெய்வ
ரகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே (௬௧)

## இதுவுமது

இப்புவியில்காபிலாகாலயூகத்தொடுநாமசங்கீதைசாத்திக
மிசைவிசுவபோதமொடுஆதிசாரத்துடன்வெகுசுருதிமாணபேத்ஞ்
செப்புமுப்பத்தினிரண்டதாஞ்சிற்பநூல்சேர்தொழிற்குபயோகமோ
செங்கலிலாடுகல்மரஞ்சோசுதைமண்லோஹஞ்சிறப்பானதந்தமெழுகு [ான்
ஒப்புமில்லயோர்வணணம்கண்டசர்க்கரையோடுதொழிற்குறுப்பீரைந்தத
தொல்லைமறைநூற்படியொன்றேனுமுணர்ந்தவனுலகத்தில் சிற்பியர்வான்
அப்புவருமிப்புவியிலழகுமுத்துளசிவிக்கஅன்பர்க்களித்தவரனை
அகத்தினிடையகலாமல்நிறுத்தில்லயனுதினமரத்துறைப்பதிநாதனே. ௬௨

## கலியுகவியல்பு.

அமவாசிவிரதத்தையழித்திடுவருலகத்திலாநித்தியகருமம்விடுவார்
அந்தணற்குரியயவுபாசனம்விட்டிடுவர்அரிதாகுநன்மாரிதான்
அமைகெந்தவாசமலரணிவதைவிட்டிடுவர்அம்புளிக்கொட்டையணிவார்
யாதேனுமீவதற்கறியாரறம்விடுவராகாதவழியிலர்வார்
சமமற்றசாத்தானீசாதிவைணவனென்பன்சங்கமனையனென்பான்
சர்வபூவேதியர்கள்சதுர்மறைகளோதிடார்சமயிலார்சத்விக்லே
அமைமதமூன்றேறுமானைதோலணிந்தவனையறிந்துகொள்ளவனிமீதில்
அகததினிடையகலாமல்நிறுததிவையனுதினமரததுறைப்பதிநாதனே. ௬௩

## இதுவுமது.

புருடர்தானுபகாரம்பூமியில்விட்டிடுவர்புரிவரபகாரபுக்ழை
புனிதமாயீவோர்க்குப்போஜனம்கஷ்டமாம்பொருளுளான்னருளிலானும்
கருடமாரணவிஞ்சைகருததினிவிச்சிப்பர்கற்பரேகட்சிவாதம் [யை
கழறுமெய்வார்தலைதயைககன்விலுங்காணர்கள்கற்றிடுவர்பொய்வார்த்தை
புருஷருககுளவிததைபுந்தியிலெண்ணர்கள்புரியார்கள்திலதர்ப்பணம
பொருள்கணிகைமாதரொருபுருஷனோடிருந்திடுவள்புகழ்மனைவிபலரைய
டைவாள்
அருட்கவியினுளபெருமையாராலுரைப்பதுவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுததிவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௬௪

## இதுவமது

காமாதிகலவியிற்கருத்தைச்செலுததிடுவர்காக்கும்நன்முறையையறார்
கருதரியஜாதிமுறைவிதிதனைவிலக்குவார்கடைசியர்கல்விகாண்பார்
நாமாதிதேவதலம்நம்பியேகும்பிடார்நன்மறைக்கிதம்நாடார்
நாடறியமரியாதையதனைவிட்டிடுவர்கணற்குணமதனைநாடார்
சீஷாதிகாரியாயிருக்கவேயிச்சிப்பர்செப்புவார்கோளினுவ்ரகள்
செல்வேதசாஸ்திரஞ்சிறிதேனும்வேண்டிடார்செப்பிடுவர்துர்வார்த்தையே
ஆமாத்தக்குடல்பாதிஅய்யனைத்துதிதினமுமறிந்துகொள்ளவனிமீதில்
அகததினிடையகலர்மல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௬௫

இதுவுமது,

சத்திபூசைகள்பூவில்சகலருஞ்செய்திடுவர்சாத்துவாராலயத்தை
சத்தியராமாயணஞ்சற்றேனுமணுகிடார்சக்கிலிப்பாட்டையறைவார்
பெத்ததாய்குருவண்ணன்பிதுர்முதற்றம்பிகள்பேச்சிலாப்பகைவராவாற்
பெருதாரம்வைப்பரட்டிபேசுமவள்சுத்தமும்பெருகுகுலதெய்வமென்பா
ருத்ததாய்தந்தைதிதிகொடுப்பதற்கிசையார்களூரியவைப்பாட்டிதாய்க்
குலகமெச்சிடவுணவளிப்பார்கள்பின்னுமேயுயர்வரிசைதானமிடுவார்
அத்திதன்சர்மமணிஅய்யனையனுதினமறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே சுசு

முப்புவகை.

உலகத்தில்முப்புவெனவுரைத்தார்களுயர்முனிவருளவுதானறியாமலே
உவரிகடல்சூழ்புவியிலுள்ளமானிடர்களிலுணர்வென்பதேதுமில்லார்
கலகமிதிலில்லைநாங்காணலாங்கனகத்தைக்கனசுலபமென்றெண்ணியே
கருதுவாருஷாரங்கல்லதின்கீழதாங்காணுமதிரவியென்பரே
விலகவிதியில்லைகடல்பாறையுப்பாமென்பர்விரும்பியேயிலைவர்பின்னும்
விண்ணினிடிமேகசூல்விளையுப்புவென்றிடுவர்வேறுவழியில்லையென்பார்
அலகையொடுபொரிடம்படைகொண்டவய்யனையறிந்துகொள்ளவனிதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. சுஎ

இதுவுமது,

காணார்களப்பையுங்கருதார்களுப்பையுங்கண்டிடார்சுத்தகங்கை
காசினியிலாமூலபுளிதனைக்கற்றிடார்கற்றார்களாதியநதம்
சேணுடுபுகழ்முனிவர்செப்பினசூத்திரஞ்சிறிதேனுமிகவறிகிலார்
செய்ததொருநூல்பயன்சேர்குருவினிலையறியார்செவ்வையாய்க்கற்றதென்றே
காணுதயலைகாடுகடல்வழிச்செடிகளுங்கடையினன்சரக்கையெல்லாங்
கடன்வாங்கிசெலவிட்டுகையிளைத்தோய்வரேகருததேதுமில்லார்களே
ஆணவத்தையுமகற்றிநீபோற்றிடவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.

இதுவுமது.

அமரியாம்பேரென்பர்அப்புறநீரென்பரானஜெயநீரென்பரோ
அல்லரமல்சாகரநீருவர்நீரெனும்பெயர்சுத்தகங்கையென்பார்
குமரியின்விந்தென்பர்நாதமென்றறைகுவார்குறித்தமுகில்சூலென்பரே
கூடசாமலாகாசநீரெனச்சொல்லுவார்குடிதண்ணீருமினியென்பார்
இயிரிகெடவானதைகுருவாலறிந்துமேதேர்சித்தனூலினலும்
நிரையமறைவிட்டொருவன்றேகத்தில்நின்றுவருஞ்சிறுநீரெனத்தெரிகுவா
நிராடிதொழுதுகுருமய்யனைப்போற்றிடவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. சுஅ

இதுவுமது.

பார்த்திடும்ரோமரிஷிகும்பமுனிபூரணம்பகர்ஞானவெட்டியெல்லாம்
பார்த்தாலுமேபிந்தபக்குவமில்லாமல்பகர்ந்திடார்வேறொன்றுமே
ஏர்த்திடும்நூலின்வழியெதுமறியாதவர்யேதோதினுங்கேட்பரோ
இசைந்திட்டவப்பிறலுண்டாகும்வாதமுறையெடுத்தாடிக்காணவென்றால்
கார்த்திட்டுநூற்பயன்கருத்தாலறிந்துவகைமுறையுஞ்செய்துகாண்பாய்
காசினியிலின்னமும்வெளியாயுரைப்பரோகருத்திலறியவேணும்
ஆர்த்திடுந்தண்டையணிகாளியோடாடுமையனையறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௭௰

இதுவுமது.

பிண்டமுப்பப்புறம்பிரமாண்டமுப்பதாம்பேர்சிங்கிவழலையுப்பாம்
பேரண்டமுப்புசெயநீருமுப்பதாம்பேர்பாறையுப்பதாகும்
கண்டிலர்தீயுப்புகாண்பழம்புளியுப்புகருதுவூஷாரவுப்புமே
கல்லுப்புமுதலானகாரணப்பெயரெலாங்கருதுமுடல்மலமுப்பதாம்
கண்டிதைக்கைக்கொளும்நியாயமுஞ்செய்கையும்கருத்துறவறியவேணும்
காணிடில்வாசிவசம்நன்மனஸ்தம்பமும்கர்த்தனாலறியவேணும்
அண்டமெதிகங்கையணிஅம்பலத்தாண்டவனையறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ௭௧

இதுவுமது.

தேவையெனில்கேட்டிடுதெரிவைநீயுப்பையுந்தேகத்தினின்றெடுக்க
தெரிந்துகொள்வாசிவசந்தேருமனஸ்தம்பமும்ஸ்திரவசப்பட்டபின்பு
கோவதின்பாலுடன்பாசிபயறன்னமுங்கொண்டுண்ணுதிங்கள்மூன்று
குறித்திடுங்காலத்தில்கூறுமதிநாள்தள்ளிகுடித்திடுவைசிறுநீரைதான்
பாவமதுசொல்லொணாப்பகர்கின்றநீரதில்பாராதுயந்தம்விட்டு
பாருநடுநீரதில்பலமேயிரண்டுதான்பாரிலிருவேளையுண்பாய்
ஆவதுபாரீசனையனுதினம்போற்றிடவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. ()

இதுவுமது

சொன்னதொருநூலின்வழிசொல்சமைதுவாகுஞ்சொல்லிடியினுப்பென்
சுற்றுமதிலக்கினிசுவாலைதானுள்ளதுசூழ்ந்திடுந்தவத்தக்கினி [பதோ
அன்னதிலுமேலதிகமாம்வாசியோகமேயானபின்னவன்மலந்தா
னதிலாகுமுப்புமேலாமூலபுளியுப்புவறிந்துகொள்ளங்கியுப்பாம்
முன்னமுறையப்புப்புஆனதீயென்றதுமாக்கையால்முடிந்ததன்றே
மூளரியுளர்பிரமநிலைகாணுதமூடர்தான்மூப்புதனையறிவார்களோ
அன்னையெனுமம்பிகைக்கிடப்பாகமீந்திடுமையனைஅறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. [illegible]

## இருதுவுமதி.

இன்பமுடன்குடியென்றியம்பிட்டநீரதிலியாக்கைகான்சுத்தியாதும்
யேதெனிற்கள்ளிதன்சுடுசாம்பலுப்பினுலனியநீரதின்பாலுதான்
அம்புவியிலப்படியாக்கையாமண்டலமாயிடிற்சுத்தகங்கை
ஆய்வதிலுப்புவரும்நிலைவரியப்போதுவாகுமலமூலப்புளி
பம்பைநஇருழ்புவியிற்பகருபலநீரையும்பாண்டத்திலொன்றதாக்கி
பையவேகரைத்திட்டுபானுவில்வைத்திடல்படர்ந்திடுமுப்புமுப்பாம்
நண்பனுக்கன்புராயடைந்தவர்க்காத்திடுமையனையறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே,(74

## பூசைகாலமறிய,

காலமதுவாறுதானுலாகுமப்புறங்கருதுரெண்டேகமென்பார்
காசினியில்வாரமதுபக்ஷநாட்பூசையாம்பகர்திங்களாண்டுபூசை
கோலமுடனித்தியநைமித்தியமென்றுறுங்குறைவிலாவுபசாரமோ
கூறுபதினாறுபின்ஷோடசதீபமாங்குறைவில்லாதெளபாசனம்
மாலையினடத்தலும்கீதமுதலவாத்தியம்மாநடனமுதலானதும்
மாசிலாத்தேவாரமோதலும்பலியிடுதன்மனத்துடன்புஷ்பாஞ்சலி
ஆலமமர்கண்டனுக்கனுதினமுமானதாமதிற்குறையிலமூகிலலையா
மகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே (75,

## திருப்பக்ஷிபலன்,

கூறுவிற்பானுகூடுநாளநாழிகைகுறுகினும்பிரதோடகாலங
கூடுமுற்றேதியானநாளாணதேகுறித்ததிருப்பக்ஷியென்பார
பூணுநாளுதய முன்புள்ளெழும்போதினில்போற்றிவிண்டேருரையேதான
பூசைதானெவர்செய்தபோதிலும்புரிவரவர்புவிமீதுமாங்கவருடம்
பேணுபலன்நாளொானறிலுண்டென்றுரைக்குமேபெரிதான்வாகமங்கள்
பேரிரவியுதித்தபின்செய்யினீதில்லையாம்பேசிடுமாகமந்தான்
மடக்கலாம்செய்பிழையனைத்தையுமழித்தவனையாட்கொள்ளுவாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.' ()

## பிரதோடகாலம

நண்ணுதிரயோதசிநாளதேபிரதோடம்நவிலிருபத்தாறுறின்மேல்
நல்லிரவின்மூன்றுகான்மூன்றுநாழிகையளவுநல்லபிரதோடமென்பார்
உண்ணலதுநீத்தீசராலயத்துட்புகுந்தேத்திபிரதக்ஷணஞ்செய்
யோதுசிவநந்தியிருகொம்பினடுதிருஷ்டியாய்க்குறித்துசிவலிங்கம்நோக்கி
வெண்ணந்திகேசுரன்பின்னின்றுவிழைவினுன்மேவிநின்றுளமிறைஞ்சி
விமலசிவலிங்கத்தையரகராவெனச்சொல்லிவிழைந்துதெரிசித்தோர்க்
அண்ணலருளாற்செல்வமாயுளும்பெறுவயேறுதியானபரனே [தெலாம்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(77

### அபிஷேகாந்தியநைவேத்யம்.

அண்ணலுக்கபிஷேகமானவுடனக்கினியகடுதனிலதிகரித்தே
அமருதிரிலோகமுணவாற்றலாவாரப்போ அமுதவகைநைவேத்தியம்
திண்ணமெனப்பூசையுபசாரவகைசெய்யினவர்தீர்க்காயுசைப்பெறுகுவார்
திறமிலாதவர்களுடைத்தேயசுட னூக்கமுந்திறல்வயதுந்தின்றுவிடுவார்
கண்ணினிதுகண்டபலனீதாகுமென்றுதான்கருதுதேயாகமங்கள்
கர்த்தன்முதல்மற்றுமுளவமரருக்கவ்வாறுகாசினியில்நீகருதுவா [தில்
யண்ணுதல்சேர்கண்ணுளனையனுதினந்துதித்திடவறிந்துகொள்ளவனிமீ
லகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. 78

### உபசாரவகை.

அர்க்கியம்பாத்தியமாசமன்னியத்துடனமருதற்காசனந்தான்
அழகானஸ்தானநீருடைவஸ்த்ரசந்தனமமைவதோருபவீதமும்
செருக்கல்பிஞசமனஞ்செப்பிமெக்ஷதைசேர்ந்தநற்றூபதீபம்
செய்யுநன்மலர்தூவல்நைவேதனம்பானியஞ்செய்யினடைக்காய்தோத்திர
வர்க்கமுடனிதனையுபசாரவகையாமென்பர்வையகத்தறிவுளோர்கள்
வழுவிடாதிநிலதிகம்ராஜோபசாரவகைவழுத்துமேயாகமங்கள்
அர்க்கல்செய்துர்சக்கைவலிபப்பினப்போற்றிடவறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே (79)

### சிவார்ச்சனைப்பலம்,

எழிலேறுதேகமுமெண்போகவித்தையுமீகையுஞ்சன்மார்க்கமும்
ஈறிலாகீர்த்தியுமினிதானதாரமுயிணங்குநல்வீவயதும்
பொழிலேறுகழனியும்புத்திரசந்தானமும்பொறுமையுஞ்சுகுணகுணமும்
பொன்ஞுதிதானியம்வாஹனநற்றூசுபோகாதவாளடிமையுஞ்
சுழியேறுகபிலையுஞ்சொல்விஜயஉளக்கமுஞ்சுயசத்திஅதிமகிழ்ச்சியுஞ்
சோர்விலாச்சந்தோஷஞ்சொல்லொழுக்கத்துடன்சூதுநோயில்லாமையும்
அழிவுதபுமையனையர்ச்சனைசெய்பலனனைத்தையுந்தருவதாகு
மகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே, ()

### தீபாராதனவகை

நாகதீபத்தொடுகெஜமசுவதீபமும்நல்லிடபநவிதீபமு
நாடுதற்கரிபுருஷமிருகதீபமாகுமாம்நல்வியாக்ரகுக்குடந்தான்
மோகமுடன்ரததீபம்நக்ஷத்திரதீபமாம்முடிவிலாமேருதீபம்
முதன்மையாங்கடதீபமுறைதட்டிலைந்ததாமுறைமையிதுபதினாறுதான்
தாகமூமேருவுடன்கைலைவில்வார்த்திதான்றக்கதொருபஞ்சஹார்த்தி
தப்பாதுகொடைவிசிறிசாமரந்தர்ப்பணந்தடையின்றிதூபதீப
ஆகமெய்ப்பாதியாயம்பிகைக்களித்திடும்பரமனுக்காளாகுவார்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. 81

### ஆகமம் 28க்கும்பெயர்

காமிகாகமத்தொடுயோகசஞ்சிந்தியங்காரணமசிதபிம்பங்
கருதரியதீப்தமொடுசூக்ஷுமஸஹஸ்திரந்தொன்விஜயசுப்பிரபேதம்
தாமியத்தொடுவீரம்ரவுரவமனலமாம்ஸ்வாயம்புவமம்சுமானம்
தக்கநிசுவாசமகுடமொடுவிமலமாந்தருசந்திரஞானகிரணம்
சேமியத்தொடுலளிதஸித்திசந்தானநேருசர்வோத்தமந்தான்
நேரிலாவாதுளநிறைபுரோத்கீதமாம்நேர்பாரமேசுவரந்தா
னமியம்மொழிநான்கேழதரமாகமமிதிலுள்ளபேராகுமாம்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. 82

### லிங்கவகை

காசினியிலிங்கவகையேழுதாங்கண்டிடுங்காண் சுவயந்தெய்வீகமாம்
கண்டுகொள்ளாரணமானுஷம்ராக்ஷஸங்கருதுமாரிஷம்பாணமாம்
தேசிகன்றறைபிரிவுமேழதாமிவைக்குரிமைஇருபதினெட்டதாகும்
தெரிதியின்னீசருக்கின்னவாகமமென்னவேர்ப்பாடுமுன்னமுளது
வாசியாரதைஅறியார்வழக்கமுந்தப்புவார்வையகத்ததில்வழங்கும்
வாகானகாரணங்காமியமகுடமொடுவளர்சந்திரஞானகிரணம்
ஆசையாயமர்ந்தருளும்மண்ணலுக்கானதென்றறைகுவாரறிந்தபெரியோர்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(83)

### அர்ச்சகனியல்பு

ஆதிசைவத்துள்ளநன்மரபினுரியனாயாகமவொழுக்கமுளனா
யாகமானுஷ்டானகாயததிரியுடையனாயாலயமுறையாவையும்
போதியாஞானமுளபுத்திவானாசாரியவபிஷேகபுனிதமுளனாய்
பொல்லாதரோகசினம்லோபகுணமில்லனாய்பூணுநவிலகுறையிலோனாய்
நீதியாநன்மார்க்கநெறியுளானாசானிகழுசிவபூஜைநேமம்
நேரதுவரிலர்ச்சகர்க்கழகென்றுரைப்பரேநெடியகடல்சூழ்புவியிலே
பாதியாமண்ணலுக்கனுதினமுமன்பனென்றறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(84

### ஆலயத்தில்செய்குற்றமறிய.

ஆசாரமில்லாமலாலயநுழைவதுமாலயத்தெச்சிலுமிழ்கல்
ஆனவதில்செல்போதில்பல்விளக்காமலும்மாமரபுடையிலாதும்
மலசாகமலஞ்சலங்கழித்திடுதல்நாசிநீர்சிந்திடுதலேபுசனம்
மெழிலுடன்சயனித்தல்காணீட்டியுட்காரர்த்லியல்பிலாச்சூதாடலும்
பாசுமுடன்மயிர்கோதிமுடித்திடுதல்தம்பூலம்பாராமலுண்டிடுதலும்
பாங்காகதலைமீதுதோண்மீதுதூசிடுதல்பகர்பாதகுறடிரக்ஷை
ஆசவுக்கமுடனேகல்லாதம்பிழையென்பர்ஆலமமர்கண்டன்மனையில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(85

இதுவுமது

நிற்கின்றவிக்கிரகந்தன்னைப்பேதீண்டிடுதெனிர்மாலியந்தாண்டலும்
நீக்கிவைத்திருக்கின்றநிர்மாலியந்தனைநேர்படமிதித்தல்தானும்
சிறக்கின்றஸ்தூபியுடன்துஜஸ்தம்பம்பலிபீடஞ்சேர்தெய்வநிழல்மிதித்தல்
சிறப்பிலாவீண்வார்த்தைபேசல்பின்சிரித்தலுஞ்செய்சண்டைவிளையாடலு
மிறுக்கல்நல்பலிபீடமீகனடுவேகலுமெழில்மாதரைக்காண்டிடல்
லிருதயத்தெண்ணலும்மீசனைச்சிலவென்னவிறைஞ்சிடாதிருத்தலேனும்
அறுக்கின்றபெரும்பிழையாருமேசெய்யொணுதறிந்துகொள்ளவனிமீளல்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமாத்துறைப்பதிநாதனே. 86

இதுவுமது

இறைவனுக்கபிஷேகநைவேதனச்சமயமெவருகிமேதெரிசித்திடா
இவ்வுடல்பூமிபடநாணிப்பணிந்திடாரிழிவானகுலத்துதிப்பார்
மறைவிதிபடியந்தவாலயத்தொருபொருளைமனதிறுதல்பெறநினைத்தல்
மஹேசனுக்குபயோகமானபின்னீத்திட்டமாதருக்குதவிசெய்வித்தல்
உறைவிதிப்படிப்பண்ணியார்வலம்வருதலானதுமுயர்மூன்றுதொகைநறைத
உறுகோயிற்கேதேனுதவாமல்செல்லுமுளத்தினிடைவேறெண்ணலும்[லும்
அறையுமிவையாவையும்மாலயப்பிழையென்னறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(87

சிவதரிசனபலன்

நித்திய சிவதெரிசனஞ்செயல்வேண்டிநீதியாய்நேரிலாதவர்களுக்கோ
நேர்திங்கள்குருபுகர்வாரத்திருயினுநெடியுவாப்பிரதோடகாலம்
பத்தியமவாசியுமுதிரையங்கிருள்பகர்மாசப்பிரப்பிலேனும்
பாரறியுமேகிரகணஞ்சிவராத்திரிநவராத்திரிபகர்கிருஷ்ணசதுர்த்தசியுமே
முத்திதருமேயபரவஷ்டமிதநிநியிலுமுக்யமாசோற்சவத்தும்
முத்திகொள்ளின்றுளில்முதல்வனைப்போற்றிடுவுரைத்திமொகமந்தான்
ஆத்திபுனையயுனருளண்பருககன்றியே யார்பெறுவரவனிமீதி
லகத்திடையகலாமல் நிறுத்திவை யனுதினமரத்துறைப்பதிநாதனே. (88)

மாசாபிடேகம்

கோலமுடனபிஷேகம் விதிதிங்களில் செயல்குறித்து வருபூர்ணைநாளில்
கூறிஞேமாடெருதுவீணைபின்களிறரி குறித்தநல்குமரிசெட்டி
நீலவுடலாங்தேளுவில்லுபின்மகரமுனிவ்குடங்கயறீறதாய்
நேர்மருக்கொழுந்து பலாமுப்பழஞ்சர்க்கரை நேர்மையுளவதிரசந்தான்
சீலமுடனே செயுந்திரட்டிப்பாலன்னமாஞ் செய்வகைத்தீபார்ச்சனை
செப்புநற்கிருதம்பின் றேனுதிருமது செழுந்தயிரீராறுதான்
ஆலமமர்கண்டனுக்கபிஷேகவிதிமானதிதுவென்றுரைப்பார்
ரகத்தினிடையணுகாமல்நிறுத்திவையனுதிதிமரத்துறைப்பதிநாததனே. 89

ஆமாதி திங்கள்சேய்செட்டி பொன் வெள்ளிசனியமருமிவ்வாரத்தினில்
லாகநல்வில்வந்துளபங் கவித்தமாமானவோர் மாதுளம்பூ
நாமர்திலவங்கமலர் செப்புநற்கொழுந்துரு நாடிடும்விஷ்ணுகாந்தி
நண்மனத்துடனுடி சிவனைவர்ச்சித்திடில் நவிலுபலனேதென்பையோ
காமாதியெண்சித்திசெல்வமுமைந்தருங்கருதுமெய்ஞானகல்வி
காசினிக்கரசாவன்கருதுறேய் தொலைந்திடுங்கண்டறிந்திவை செய்குவாய
யாமாது தலைதனிலமையுற்ற வேணியான் வவநியோர்க்கருள்புரிகுவா
னகத்தினிடையணுகாமல்நிறுத திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.

நற்றீர்த்தமபிஷேக நல்லெண்ணை யரிசிமா நன்மஞ்சணெல்லிமுள்ளி
நல்லபில்லபிஷேகமரிதான நெய்தயிர் ஈற்புனுகுஜவ்வாதுதான்
கற்றேறது பஞ்சாமிர்தசர்க்கரைக்கதலி பிலாகாண் மாதுளமிச்சையும்
காதலொடுநாரத்தை கொளஞ்சி கற்பூரங்கருதுதேனிளனீரையுஞ்
சத்தியஞ்சந்தனஞ் திரட்டுப்பால்மதுக்ஷீரஞ்சார்பெறுங்கரும்புநீராஞ்
சாத்தன்னம்வில்வநீர் ஸ்தபனநீர்கலசநீர் சாருமோரத்தோதகம்
அத்தியுரிபோர்த்திடுமெண்ணலுககபிஷேகமாந் திதுவே யறிகுவா
யகத்தினிடையகலாமல்நிறுத்திறையனுதினமரத்துறைப்பதிநாதனே, (91

லிங்கபூசை.

ஆமாறுமண்லிங்கபூசைபுரிவோர்க்குமாயுசுவிருத்தியுண்டாம்
மாவுநற்சாணிசிவமமிர்தமுண்டாநல்லவீபூதிமுததியுண்டாம்
கூமேருலிங்கமதுசெய்தபேர்க்கின்பமாங்கூறுநல்மைந்தருண்டாம்
கோருநற்சந்தனங்கொடுக்குநற்பாக்கியங்கூடுபூக்கட்டடந்தான்
தாமேருநவனீததக்கநற்றுரமாந்தானுத்திராக்ஷமாலை
தரணியில்பிறவியிலைத்தருனல்லகுளமெனிற்றருகுமதுபூசெல்வமே
யாமாதுயெடப்பாகன்ரய்யருமவனையேஅறிந்துகொள்ளவனிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.[92

இதுவுமறு,

மொழிபெயருமரிசனம்லிங்கமேயிசைதருமுகிழ்மலர்லிங்கசுகமா
முறையிடுமமுமேதனுமிலிங்கமேசம்பத்துவுரையடிசலிங்கமோதான்
ஞெழிவிலாதாக்கமாங்வோதிஞராகமழுயாகுளலிங்கபூசை
உலகத்தில்சிவபக்திதருகுமென்றுரைப்பரேவுளவருணநான்கிஞேரும்
இழிவிலாதாத்துமசிவபூசைபுரிவோர்க்குமிவைபலனெனவுரையார்
இனியபொன்வெள்ளிசெம்புடன்படிகமுமியல்நான்குபலனுள்ளதாம்
அழிவிலாதரத்துறையில்தனிலொன்றுனமகிபனைமறிந்துகொள்வாய்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.(93

## இதுமஃது.

போகுமோம்பாவம்புகழ்துபமதனிலேடோய்விமிருத்யூதீபம்
பொல்லாதநாகதீபமேபுத்திரர்பொங்குபசுவிருத்திரிஷபம்
ஏகுமோரோகநாசமாம்நக்ஷத்திரமெழிலானகடதீபமோ
ஏறிவருங்குற்றங்களத்தனையுந்தீர்த்துவிடுமிசைபுருஷமிருகதீபமோ
வாகுடன்சர்வசித்தியாம்பலன்தரும்வையகங்கொண்டையளிக்கும்
வாகானதர்ப்பணமெழிலானதுவிசிறிமேடாவளருமெய்வர்க்கசுகமே
யாகுநீராஞ்சனமனர்தபலமெனன்டரேயறிந்துகொள்ளவணிமீதில்
லகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. (94

## சிவதரிசனகாலபலன்,

பிரதிதினங்காலையில்சிவதரிசனஞ்செயில்பிரிந்துவிடுஞ்சிபாவமே
பெருமைதருமத்தியானம்பிறைதரனைநோக்கிடிற்பெயருந்திடும்பகற்பாவமே
மறதிக்கிடமின்றிமாசாயரக்ஷையில்மகேசனைத்தரிசித்திடில்
மானிடர்க்கணுகாதுமாபிறவிமேழினுள்மாபாதகந்தானுமே
சுருதிசொற்படியர்த்தசாமத்திற்குமையைசோராமல்பார்த்தபேர்க்கு
சொல்துாகமோரைந்துகோடியாம்யாகபலன்சொல்லுவேதமகுடாகம [ம்
அறிதியிதையனுதினமும்மரன்றனைத்தொழுதுவாழறிந்துகொள்ளவணிமீதி
அகத்தினிடையகலாமல்நிறுத்திவைஅனுதினமரத்துறைப்பதிநாதனே. (95

## சிவசோத்தைஅபகரித்தல்

பேசியவாலயப்பொருளைனும்பெருளதைப்பிசகதாயணுவாகிலும்
பெததிமானிடர்பெருநரகில்வீழ்வர்பின்கிருமிபுழுவேனமாவார்
தேசிக்குக்குடமாவர்தெளிவிலாக்குக்கலாய்தெரியட்டையீனயாகி
தேகமேயெடுத்திவ்வோதீக்கும்வகைகாணோகள்தேளகுளவியாகி
ஈசன்நன்பொருளுக்கேற்படும்குற்றத்தையெந்தமருள்சொல்லலாமோ
எத்தவஞ்செய்யினுமிதைநீக்கவறியாகளெம்மரபுளோராகினும்
வாசவன்முதூமண்ணல்றளர்நாமமேதுதிவரிசையுடனவணிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. (96

## இதுவுமது.

இரவிமுன்னிருள்வரினுமெழில்சோரமங்கைக்கினியகற்புண்டாயினும்
யேதிலாகாமிக்குஞானமுண்டாயினுமிறைகடனீரினிதாயினும்
குருவிகொக்காம்பறவைகோதிலாச்சீயனைகொன்றபேர்வீடடையினும்
கொடியபாம்பதின்வாயிலமிர்தமேதங்கினும்கூறுவனல்புனலாயினும்
இரும்ருவுமார்பனரன்றேவதைபூசுரன்நீதிலாரிவர்பொருளையே
தெரிந்தேனுந்தெரியாமலேதேனுமுண்டவனைத்தீநரகம்விட்டிடாது
ஆறுதலையணியண்ணலகத்தினும்போகாதறிந்துகொள்ளவணிமீதில்
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. [97

## பிரத்தியக்ஷதெரிசனம்

இப்புவியில்சீகாழியிலேவனுக்கீந்தனனினியசித்திலசிவிகைதா
னெழிலானசின்னமொடுதாளமுந்தந்தனனிறைஞ்சுமப்பர்க்குநேராய்
தப்பிலாக்கடந்தையிற்றுனருளினன்முத்திரைதரித்தபின்காயசுத்தி
தப்பாதுவாகுமெனவப்பர்க்குரைத்தனன்றரணியில்வால்மீகரை
எப்புவியிலதிகமிதிலிருமென்றிசைத்துபின்னிரவிசுதனுனைகோட்கு
எழில்பெருமையீந்திங்கிருக்கவைகதாறன்றிபல்வாணிசாபம்நீத்தா
ரப்புடனுகைமதிமத்தையணியய்யனையறிந்துகொள்ளவனிமீதி
லசததினிடையகலாமல்நிறுததிவையனுதினமரத்துறைப்பதிநாதனே, (98

## மனுஷியர்க்குவேண்டியது.

சஞ்சரித்திவ்வுடல்சாவுநாளளவினுஞ்சஞ்சலந்தானிலாமல்
சதமாகினுந்தனந்தாழாமற்சடலநோய்சாராமல்வெங்கோபமும்
சொஞ்சமெனினுந்தீதுசெய்யாமலொருவர்மேல்கோளுரைகள்பேசாமலும்
கோறிவருமியாசகற்கில்லையெனுமாலோபகுற்றங்கள்வாராமலும்
வஞ்சமனமில்லாமல்வயிரவைகைவாராமல்வாளுரைத்துதிசெய்திட
வுருபக்தியொடுநேமஞ்சததியவசனமும்வாழமனமெனக்கருளுவா
யஞ்சலிசெய்திடவறிந்திலான்செய்பிழையனைத்தையும்நீக்குமரனை
ய சததினிடையகலாமலநிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே. 99

## இதைச்சேர்ந்தசப்ததுறையின்பெயர்

இத்தலம்வாலமீகரிதன்மேற்குவதிட்டபுரமிருப்பரேவதிட்டருந்தா
னிதின்னிருதியாடுதுறைசுக்கிரீவராசனுஞ்சுகமுடன்பூசைசெய்தான்
நற்றலாவதின்மேற்குநாடுமிருகண்டுவும்நற்றவமிழைததுறையதாம்
நல்லதாமதின்வாயுற்றிருமாலயன்ராகுதாபித்தவாலந்துறை
மெத்தவும்பெரிதிதாமிதின்வடக்குள்ளதுதிருவாதிசததிதுறைதான்
மேதினியின்னமும்திருக்கரத்துறையொன்றுமேலிடுமேழுதுறையும்
சததியாய்சகலபலனசேருவோரெவர்க்கெல்லாஞ்செகமீதிலுண்டென்பரே
அகத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே.100

## சதகமுரைத்தவருடையபெயர்விபரம்

சீர்மேவுகலிவருடநாலதாமாயிரஞ்செப்பினேந்தொளாயிரம்பின்
சேர்நதிடுந்தொண்ணூறுவாண்டதாஞ்சென்றதுசொற்சாலியாண்டுவருடம்
யேர்மேவுமாயிரமெண்பத்திரெண்டதாமிதில்செல்லுபிரபவாதியோ
இத்தரையிலாமபெயர்விரோதியினட்தமாமியல்மகரபூர்வபக்கம்
தார்மேவுதுதிகைதிதிசெக்குநாள்புதவாராந்தலமரத்துறையிலுறைவோன்
தருமறைகுலத்தவஷ்ணவப்பூசுரன்றருபெயரரங்கசாமி
ஆர்மேவுஅண்ணன்மேலரத்துறைப்பெயர்சதகமமைத்தனன்னவனிமீதி
லசத்தினிடையகலாமல்நிறுத்திவையனுதினமரத்துறைப்பதிநாதனே 101

MAHAMAHOPADHYAYA
சதகம்முற்றிற்று